சிங்கப்பூர் போக்குவரத்து - வர்த்தகத் துறை

அமைச்சர் எஸ்.ஈஸ்வரனுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!

இரு நாடுகளிடையே பொருளாதார வர்த்தகம் குறித்து ஆலோசனை !

சிங்கப்பூர், மே 25-

சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுடன் தமிழ் நாட்டிற்கு உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டா ளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்வதற்காக 23.5.2023 அன்று சென்னையிலிருந்து சிங்கப்பூர் புறப்பட்டு சென்றார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு!

நேற்று (24.5.2023) சிங்கப்பூர் நாட்டிற்குச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் Temasek, Sembcorp, CapitaLand ஆகிய நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர்களை சந்தித்துப் பேசினார். அப்போது தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு நிலவும் சாதகமான சூழ்நிலையை எடுத்துக்கூறி, தமிழ் நாட்டில் தொழில் முதலீடுகள் செய்திட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ். ஈஸ்வரன் அவர்களை சந்தித்து, இரு நாடுகளுக்கிடையே உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது பற்றியும், புதிய தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்வது குறித்தும் உரையாடியதோடு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, அமைச்சர் ஈஸ்வரன் அவர்கள், வழக்கமான முதலீடுகள் தவிர பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் போன்ற துறைகளில் இணைந்து செயல்பட வாய்ப்புள்ளது குறித்தும், செமிகண்டக்டர்கள் மற்றும் எலக்ட்ரானிக் உதிரி பாகங்கள் தயாரிப்பிற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் விவாதித்ததோடு, அக்டோபர் மாதம் சிங்கப்பூரில் நடக்கவிருக்கும் Fintech மாநாட்டிற்கு தமிழ்நாடு அரசின் குழுவை அனுப்பிடவும் கேட்டுக் கொண்டார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கு முதல்வருக்குப் பாராட்டு!

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிங்கப்பூரைச் சேர்ந்த செம்ப்கார்ப் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் பசுமை சக்தியை உருவாக்குவது வருவது குறித்தும் பேசி வருவதாக அமைச்சர் ஈஸ்வரன் அவர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு மாநிலத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காக, அமைச்சர் ஈஸ்வரன் அவர்கள் தனது பாராட்டுகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை உயர்நீதி மன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக

நீதிபதி எஸ்.வைத்தியநாதன் நியமனம்!

சென்னை, மே 25-

சென்னை ஐகோர்ட்டின் புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக எஸ்.வைத்தியநாதனை குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு நியமித்து உள்ளார். சென்னை, ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்தவர் டி. ராஜா. சென்னை ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த முனீஷ்வர்நாத் பண்டாரி கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி பணி ஓய்வுபெற்றார். அவரை தொடர்ந்து செப்டம்பர் மாதம் சென்னை உயர்நீதி மன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட் டார் டி ராஜா.

இதற்கிடையே ஒடிசா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த முரளிதரை சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமிக்க உச்சநீதிமன்றம் கொலீஜியம் பரிந்துரைத்தது. ஆனால், தமிழ் நாட்டைச் சேர்ந்த முரளிதரை சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமிக்க வேண்டும் என்ற கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தியது.

கொலீஜியத்தின் பரிந்துரைபடி முரளிதரை சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நியமிக்காததன் பின்னணியில் பல்வேறு அரசியல் காரணங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த நிலையில் கொலீஜியமும் கடந்த ஏப்ரல் தனது பரிந்துரையை திரும்ப ப்பெற்றுக் கொண்டது. அவரை தொடர்ந்து மும்பை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக உள்ள கங்கா பூர்வாலாவை சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு கொலீஜியம் பரிந்துரைத்தது. அந்த பரிந்துரை மீது ஒன்றிய அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிபதி வைத்தியநாதன் மே 25 அம் தேதி முதல் தலைமை நீதிபதிக்கான பணிகளை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கோவையில் பிறந்த நீதிபதி வைத்தியநாதன், பள்ளி மற்றும் சட்டப் படிப்பை சென்னையில் முடித்தார். 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வழக்கறிஞர் பணியை வைத்தியநாதன் தொடங்கினார். கடந்த 2013 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டார்.

அண்ணல் அம்பேத்கர் நூல்கள் தமிழில் வெளியிடும்

திட்டப் பணிக்கு தற்காலிகப் பணியாளர்கள் நியமனம்!

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு!

சென்னை, மே 25 -

அண்ணல் அம்பேத்கர் நூல்கள் தமிழில் செம்பதிப்பாக வெளியிடும் திட்டப் பணிக்கு தற்காலிக பணியாளர்கள் நியமனம் தொடர்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு ஒன்றை வெளியிடுள்ளது.

அது வருமாறு:-

முதலமைச்சர் அவர்களால் 2022 - 2023ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை விதி எண்110ன் கீழ் அறிவித்த அறிவிப்பில் "அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தேர்ந்தெடுக்கப் பட்ட நூல்கள் தமிழில் செம்பதிப்பாக வெளியிடுதல்" என்பதாகும்.

இத்திட்டப்பணியை மேற்கொள்ள திட்ட மேற்பார்வையாளர் திங்கள் தொகுப்பூதியம், ரூ. 40,000/, திட்ட உதவியாளர், திங்கள் தொகுப்பூதியம்

ரூ. 22,000/ மற்றும் அலுவலக உதவியாளர், திங்கள் தொகுப்பூதியம் ரூ. 15,000/ ஆகியப் பணியிடங்களில் தற்காலிகமாகப் பணியாளர்கள் எதிர்வரும் 3 ஆண்டு களுக்கு நியமனம் செய்யப்பட உள்ளனர். இப்பணியிடங்களுக்கு விருப்பமும், தகுதியும் உள்ளவர்கள் விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட ஒளிப்படிகளுடன் இணைத்து வரும் 30.05.2023 பிற்பகல் 5.30 மணிக்குள் இயக்குநர் (கூ.பொ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை 600 113 என்ற முகவரிக்கு நேரிலோ, அஞ்சலிலோ அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விண்ணப்பம் மற்றும் தகுதிகள் குறித்த விவரங்களை www.ulakaththamizh.in என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

இவ்வாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் அறிவித்துள்ளார்.

கேரள முதல்வர்

பினராயி விஜயன் பிறந்தநாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, மே 25-

கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கேரள மாநில முதலமைச்சரும், எனது அன்புத் தோழருமான பினராயி விஜயன் அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்.

கேரளத்தின் வெற்றிக் கதையை தனது முழு முயற்சியுடன் இயற்றும் அவர்

நீண்ட ஆயுளுடனும் உடல் நலத்துடனும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வீ.கா.வெங்கடேசன் தலைமை! டி.லோகேஷ் முன்னிலை!

75 வது வட்ட நிர்வாகிகள்- பாக முகவர்கள் கூட்டம்!

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ - எம்.சாமிகண்ணு பங்கேற்பு!

சென்னை, மே. 25

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் 75 வது வட்ட நிர்வாகிகள் மற்றும் (BLA 2) பாகமுகவர்கள் கழகப் பிறஅணிகளின் நிர்வாகிகளுடன் ஆலோசிக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரமான பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் விழாவையொட்டியும், கழக ஆக்கபூர்வமான பணிகளை பற்றி கழக உடன்பிறப்புகளுடன் 75 வது வட்ட கழக செயலாளர் வீ.கா.வெங்கடேசன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.லோகேஷ் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்தில் பகுதி கழக செயலாளர் எம்.சாமிகண்ணு, தொகுதி மேற்பார்வையாளர் மு.தம்பிதுரை, 75 வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.ரமணி லோகேஷ், இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் நா.துலுக்கானம், பகுதி துணைச் செயலாளர் ச.வனஜா சண்முகம், பகுதி துணைச் செயலாளர் பி.சுகுமார்,

மாவட்ட பிரதிநிதிகள் வெல்டிங் எஸ்.பாபு, அ.விஜயகுமார் மற்றும் 75 வது வட்ட கழகம் நிர்வாகிகள் அவைத் தலைவர் மு.ஆதிகேசவன், துணைச் செயலாளர் வில்கிண்ஸ், துணைச் செயலாளர் மதிவாணன், துணைச் செயலாளர் மகளிர் தேவி, பொருளாளர் விஜயகுமார், பகுதி பிரதிநிதிகள் ப.உதயச்சந்திரன், சுதாகர், நந்தகோபால், மணிகண்டன், மாணிக்கம், மாசிலாமணி மற்றும் (BLA 2) பாக முகவர்கள் நம் கழக பிற அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழறிஞர்

கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை,மே.25-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையிலும் மாநில துணைத் தலைவர் வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் விழுப்புரம் புஷ்பராஜ், வி.பி.இராஜன், திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி மாநில துணைச் செயலாளர்கள் கோத்தகிரி மு.பொன்தோஸ், திருச்செங்கோடு மு.பரமானந்தம், மயிலை சி.தசரதன், அரூர் சா.இராசேந்திரன், மானாமதுரை மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

ஆண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வை

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடிடுவோம்!

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஒய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர்; ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டுகாலப் பங்களிப்பாளர்; அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர். இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர்; இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர்; திருக்குவளையில் பிறந்து திருவாரூரில் வளர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 2023 சூன் 3ஆம் நாள் தொடங்குகிறது. நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும், குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்காகவும் அவர்தம் சந்ததியினருக்காகவும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி அல்லும் பகலும் அயராது பாடுபட்ட தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, 2023 ஜூன் 3 முதல் 2024 ஜூன் 3 வரையிலான ஓராண்டு முழுவதும் எழுச்சியோடு தமிழ்நாடு முழுவதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரை எங்கெங்கும் நடத்திட தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தீர்மானிக்கிறது.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம்

எண்பதாண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரரும் ஒப்பாருமிக்காருமில்லாத தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடிடும் வகையில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றும் தி.மு.க. மாநில ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் சென்னையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்திடுவதெனவும்,

அதைப்போலவே. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்

தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அவர் மாநாட்டு உரை நிகழ்த்தும், தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநாட்டினை நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 21.5.2023 அன்று நடைபெற்ற தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக்குழுக் கூட்டத்தில்" நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் ஆதிதிராவிடர் இன மக்கள் வாழும் அனைத்து பகுதிகளிலும் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க நாளான ஜூன் 3ஆம் தேதியன்று ஒரே நேரத்தில் அவரது திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதுடன், அனைவருக்கும் இனிப்பு வழங்கிட வேண்டுமென ஆதிதிராவிடர் இன மக்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நடைபெற்ற முடிந்த ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிட்ட கழக கூட்டணி வேட்பாளரான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் வெற்றி கடுமையாக பணியாற்றிய நமது ஆதிதிராவிடர் நலக்குழுவைச் சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகளுக்கு, இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பட்டியல் ஏற்கனவே வெளியிடப்பட்ட மாவட்டங்களைத் தவிர, மீதமுள்ள மாவட்டங்களுக்கான பட்டியலை விரைந்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

திரு.வி.க. நகர் முன்னாள் மாமன்ற உறுப்பினர் மறைந்த க.வரதனின் மகன் வ.புகழேந்தி இல்ல நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டார். எம்.சாமிக்கண்ணு, அ.கோவிந்தன்,பெரம்பூர் ராஜன், வெற்றிவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் திராவிட அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் மேற்கு தாம்பரம் 50வது வார்டு ரங்கநாதபுரம் பகுதியில் பகுதி துணை செயலாளர் ஜா.ரவிக்குமார் தலைமையிலும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் மு.வினோத் வரவேற்பிலும் எஸ்.பாஸ்கர், கே.எஸ்.யுவராஜ், எஸ்.கார்த்திக், ஆர்.செல்வகுமார், பி.காளியப்பன், ரா.தனசிங், பா.மோகன்தாஸ், ஏ.எம்.ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் எழும்பூர் கோபி அவர்களும் 4வது மண்டல குழுத்தலைவர், பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் எம்சி தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர், 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன் எம்சி கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் டி.ஆர்.கோபி எம்.சி., பி.பாரதி, செ.சுரேஷ் எம்.சி., லிங்கேஸ்வரி பாபு, இரா.கந்தசாமி, எம்.ரவிக்குமார், மா.கன்னியப்பன், எஸ்.சரவணன், வீ.கார்த்திக், எஸ்.கார்த்திக், ஆர்.சீனா, ரமேஷ், கே.எஸ்.ராஜா, மாமன்ற உறுப்பினர்கள்: பி.ஜோதிகுமார், ரமணி ஆதிமூலம், வி.முனுசாமி, செ.முகுந்தன், செ.செல்வபிரகாஷ், கே.எம்.தாஸ், மு.சூர்யா, எஸ்.மகேஷ், நவீன், ஹரிஹரன், நகர பேச்சாளர்கள்: பி.வி.ஏகாம்பரம், சே.மைக்கல்ராஜ், வட்ட கழக செயலாளர்கள்: ஆர்.சஞ்சீவி, மு.விஜயன், கே.ரமேஷ்பாபு, சீ.இளஞ்செழியன், வ.லோகநாதன், குபிரபாகரன் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

மாதவரம் வடக்கு பகுதி கடப்பாக்கம் கன்னியம்மன் பேட்டை பகுதியில் கழக இளைஞரணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாம் ஆண்டு சாதனை விளக்க கூட்டம் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் முன்னிலையில், மாவட்ட பிரதிநிதி நா.மோகன் குமார் நாகூரார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமையில் தமிழ்நாடு அரசு கொறடா முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் 250 தாய்மார்களுக்கு புடவைகள் நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டன. மாவட்ட நிர்வாகி அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன்,பா, சந்திரன் அருள், வெங்கடேசன், பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், குமரவேல்,முத்தையா, ரமேஷ், மாரி, ராஜ்மோகன், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன்,நீதி, மகேஷ்குமார், சாம்ராஜ் ,ஜெயபால், மற்றும் திரளான திமுகவினர் கலந்து கொண்டார்கள்.